www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2022

FWC

| தொடர்பாடலும் ஊடகக்கற்றையும் I<br>Communication and Media Studies I | Two hours<br>Gr -13 (2022) | 29 | T | I |
|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுதலுக்கமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டக.

### பகுதி I

01. தொடர்பாடலின் இயல்புகளில் பிரதானமாவது
 1) குறியீட்டுத் தன்மையானது
 2) சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கியைவானது
 3) தொழினுட்பம் சார்ந்தது
 4) பல் திசைகளிலானது
 5) செயன்முறையாகும்.

02. தொடர்பாடல் செயன்முறையில் மீளவலியுறுத்தலின் முக்கியத்துவத்தினை கூறியிருந்தவர் பின்வருபவர்களில் யார்?
 1) வில்பர், ஷ்ராம்  2) ஷ்ராம் மற்றும் ஒஸ்கட்  3) எட்வேட்சப்பியர்
 4) ஷனோன் மற்றும் வீவர்  5) ஹரோல்ட்லாஸ்வெல்

03. செய்தியொன்றினை குறிமுறையவிழ்ப்புச் செய்யப்பட்டிருப்பின் அதனை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு உதவும் காரணி எது?
 1) அனுபவக்களம்  2) தகவல்  3) பொருட்கோடல்
 4) குறியீடுகள்  5) சமிக்கை

04. ஊடகச்செய்தி பரவலடைதல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விளக்கத்தினை சரியாகப் புலப்படுத்தும் தொகுதி
 1) வாயிற்காப்போன், இருபடிநிலை
 2) நேர்கோட்டு விளக்கம், கலந்துரையாடல் மாதிரி
 3) வில்பர்ஷராம் மாதிரி, லாஸ்வெல்மாதிரி
 4) ஹப் (HUB) மாதிரி, இருபடிநிலை மாதிரி
 5) ஷனோன் வீவர் மாதிரி, பெர்லோ மாதிரி

05. ஜனரஞ்சககலாசாரத்தினை உருவாக்கக்கூடிய பிரதான வெகுசன ஊடகப்புலம்
 1) வானொலி ஆகும்  2) சினிமா ஆகும்  3) தொலைக்காட்சி ஆகும்
 4) இணையம் ஆகும்  5) சமூக ஊடகம் ஆகும்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

06. பொதுமக்களின் கடமைப் பொறுப்புக்கள் எனும் நூலின் மூலம் பொதுசனத் தொடர்பு பற்றிய கருத்துருவாக்கங்களினை முன்வைத்தவர்.
   1) யூலிய சீசர் 2) எட்வாட் எல் பெர்ணிஸ் 3) ஜவி லீ
   4) சாம்பிளக் 5) மகாத்மா காந்தி

07. ஷெனொன் மற்றும் வீவரின் தொடர்பாடல் மாதிரியில் உள்ளடக்கப்படாதது
   1) தடை 2) குறிமுறையாக்கம் 3) கடத்தி
   4) விளைவு 5) தகவல்

08. தொடர்பாடலின் மிக முக்கிய பணியாக கருதப்படுவது
   1) பரந்துபட்ட மக்களுக்கு தகவலை கொண்டு செல்வது
   2) சமுதாயமொன்றின் இடைத் தொடர்புகளை கட்டியெழுப்புவது
   3) சிந்தனைகளினை பொதுமைப்படுத்துவது
   4) பொழுதுபோக்கினை வழங்குவது
   5) பெறுநரிடம் தாக்கத்தை வழங்குவது

09. நாட்டாரியல் முக்கியமானதொரு தொடர்பாடல் வடிவமாயிருப்பது ஏனெனில்
   1) அது ஆட்களிடைத் தொடர்பாடல் வழிமுறையாகும்.
   2) அது பேச்சுத் தொடர்பாடல் வழிமறையாகும்.
   3) அது வாய்மொழித் தொடர்பாடலை அடிப்படையாக கொண்டதாகும்.
   4) அது படைப்பாக்க மூலமாக பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகும்.
   5) உள்ளூர்த் தொடர்பாடல் மாதிரியொன்றாக முன்வைக்கப்படுவதாகும்.

10. ஆடைகள் ரீதியிலான தொடர்பாடல் பற்றிய தவறான கூற்று எது?
   1) கட்புலத் தொடர்பாடலுடன் தொடர்புடையவை
   2) தொழில் வேறுபாடுகளை புலப்படுத்தக் கூடியவை
   3) வாய்மொழித் தொடர்பாடலில் பயன்படுத்தப்படமாட்டாது
   4) கலாசார வேறுபாடுகளை இனங்காட்டக் கூடியது
   5) வாய்மொழி சாராத தொடர்பாடலினுள் உள்ளடக்கப்படும்

agaram.lk

11. குறியீடுகள் எனப்படுபவை.
   1) வீதிப் போக்குவரத்துடன் தொடர்புடையவை
   2) வாய்மொழித் தொடர்பாடலையும் கடந்து செல்பவை
   3) இன்னொன்றைப் பிரதிநிதித்துவப் படுத்துபவை
   4) மதச் சிந்தனைகள் தொடர்பாடுவதற்கு உதவுபவை
   5) காட்சிகள் ஒலிகளை பிரதிநிதித்துவப்படுத்துபவை அல்ல

12. பின்வருவனவற்றள் எந்த ஊடகம் பிரசித்த பண்பாட்டியலை பரவலடையச் செய்யக் கூடியது
   1) தொலைக்காட்சி 2) வானொலி 3) சினிமா
   4) இணையம் 5) செய்திப் பத்திரிகை

13. ஆளிடைத் தொடர்பாடல் பற்றிய தவறான கூற்றினை தெரிவு செய்க.
   1) அது நேருக்கு நேர் நிகழ்த்தப் பெறுவது
   2) எப்போதும் தொழினுட்பத்தைப் பயன்படுத்த முடியாது
   3) வாய்மொழி சாராத் தொடர்பாடல் வலுவாக பயன்படுத்தலாம்.
   4) குழுத் தொடர்பாடலில் இடம்பெற கூடியது
   5) உணர்வுகளை அதிக வினைத்திறனுடன் வெளிப்படுத்த முடியாதது

14. ஆசிரியர் வகுப்பறையில் பயன்படுத்திய சில சொற்களின் பொருளை அறியாத மாணவர்கள் கலைக்களஞ்சியத்தை புரட்டிப் பார்த்தனர் இச்சந்தர்ப்பத்தில் மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்டது
   1) பொருட்கோடல் 2) குறிமுறையாக்கம் 3) குறிமுறையவிழ்ப்பு
   4) மொழிபெயர்ப்பு 5) பகுப்பாய்வு



agaram.lk

www.agaram.lk

15. நோக்கம், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் முதலான கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து மிகவும் பொறுப்புடன் கூடிய தொடர்பாடல் வகை எது?
1) ஆளுள் தொடர்பாடல் 2) ஆளிடைத் தொடர்பாடல் 3) குழுத் தொடர்பாடல்
4) வெகுசனத் தொடர்பாடல் 5) பொதுசனத் தொடர்பாடல்

16. வாய்மொழியல்லாத தொடர்பாடலின் இயல்பு அல்லாதது
1) தொடர்ச்சியான செயன்முறையாக இருத்தல்
2) அகவயத் தன்மைகளிலிருந்து விடுபட்டிருத்தல்
3) பல்வேறு முறைகளைப் பயன்படுத்தக் கூடியதாயிருத்தல்
4) தன்னெழுச்சியாகவும் செயற்படக் கூடியதாயிருத்தல்
5) பொதுவான ஒழுங்கு விதி காணப்படாதிருத்தல்

17. மதகுரு, பஞ்சாயத்து லீடர், கிராமத்தலைவர்கள் ஆகியோரை இணைத்துக் கொள்வதன் மூலம் தகவல் பரிமாறுபவது தெளிவுபடுத்தப்படுவது
1) தனிநபர் விம்பம்
2) இருபடிநிலைக் கோட்பாடு.
3) பெறுநர்மைய அணுகுமுறை
4) செய்தி முகவர் பரப்புரை
5) சமச்சீரற்ற பரப்புரை மாதிரி

18. நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியாக விடினும் மனிதன் நாயைக் கடித்தால் செய்தியாகும் எனும் கருத்தியலை படைப்பாக்க செய்தி பற்றி வரையறுத்தவர்
1) மில்ரன் பிரஷ் 2) சாள்ஸ் அண்டர்ஷன் டானா 3) எவட்வேட் பெர்ணீஸ்
4) டட்ளிசியர்ஸ் 5) விமல் திசநாயக்கா

19. தவறான கூற்றைத் தெரிவு செய்க.
பொதுசனத் தொடர்பு என்பது அதிகமாக
1) ஓர் இருவழிச் செயன்முறையாகும்.
2) ஓர் மேம்படுத்தல் செயற்பாட்டின் ஒரு பகுதியாகும்.
3) விளம்பரத்திலிருந்து வேறுபட்டதொன்றாகும்.
4) சந்தைப்படுத்தல் செயன்முறையாகும்.
5) நீண்ட கால பெறுமதிகளை எதிர்பார்த்திருப்பதாகும்.

20. வெகுசன ஊடகச் செயன்முறையில் வெளித்தரப்பின் பங்குபற்றலோடு நடைபெற்றுக் கொள்வது
1) பொறுப்புக்கூறல் 2) ஒழுங்காக்கி 3) வடிகட்டி
4) மதிப்பீடு 5) கடமைபொறுப்பு

பின்வரும் தகவல்களை 21 – 24 வரையிலான வினாக்களுக்கு பயன்படுத்துக.

A- ஹரோல்ட் லாஸ்வெல் மாதிரி
B- ஷனொன் மற்றும் வீவர் மாதிரி
C- ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட் மாதிரி

21. குறிமுறையாக்கம் மற்றம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பில் கவனஞ் செலுத்தும் அதே நேரம் நேர்வழிச் செயன்முறையாகவும் காட்டப்படும் தெரிவு.
1) A மாத்திரம் 2) A,B ஆகியன மாத்திரம் 3) B மாத்திரம்
A. B,C ஆகியன மாத்திரம் 5) C மாத்திரம்

22. சேந்தினி இதபாசியிடம் நீங்கள் தொலைபேசியில் கூறிய விடயம் சரியாக விளங்கவில்லை இதனால் என்னால் அவற்றை கிரகிக்க முடியவில்லை என கூறினார். தொடர்பாடல் காரணிகளின் அடிப்படையில் இந்தக் கூற்றை விளக்குவதற்கு மிகப் பொருத்தமான தெரிவு
1) A மாத்திரம் 2) A,B ஆகியன மாத்திரம் 3) B மாத்திரம்
4) B,C ஆகியன மாத்திரம் 5) A,B,C ஆகியன மாத்திரம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

23. சூழ்நிலையின் நன்மை தீமைகள் இரண்டைப் பற்றியும் கோபிகா ஆழமாக ஆராய்ந்தார் தகவல்களை கவனமாக மதிப்பிட்டதன் பின்னர் கோபிகா தனது பதிவினை தனுஷாவிற்கு அனுப்பினார். இது விவரிக்க முடியுமாக இருப்பது.
   1) A இனைப் பயன்படுத்துவதனால்
   2) A மற்றும் B இனைப் பயன்படுத்துவதனால்
   3) B இனைப் பயன்படுத்துவதனால்
   4) B மற்றும் C இனைப் பயன்படுத்துவதனால்
   5) C இனைப் பயன்படுத்துவதனால்

24. தொடர்பாடலில் எதிர்பார்த்த பெறுபேற்றினை அடைதல் தொடர்பாக வலியுறுத்தியவரும் நவீன தொடர்பாடல் விளக்கத்தினை முன்வைத்து விளக்கமளித்தலை காட்டும் தெரிவு
   1) A மாத்திரம் 2) A,B ஆகியன மாத்திரம் 3) B மாத்திரம்
   4) B,C ஆகியன மாத்திரம் 5) C மாத்திரம்

25. வெகுசனத் தொடர்பாடலில் ஆகக் குறைந்த முக்கியமான பணி.
   1) பன்முகக் கருத்தியலை உருவாக்குவது
   2) சமூகமயமாதல்
   3) பெறுநர்களின் தேவைகளோடு ஒத்திருப்பது
   4) சமூக மரபுரிமைகளினை ஊடுகடத்துவது
   5) சமூக வளர்ச்சிக்கான தூண்டலை வழங்குவது

26. எமது நாட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அரசுக்கெதிரான போராட்டங்கள் தொடர்பில் ஊடகங்களின் வெகுசன பணி அளப்பரியதாக கருதப்பட்டது. ஊடகங்களின் பார்வையில் அவை முக்கியம் பெறுவது
   1) தகவல் வழங்குதல் 2) அரசினை நிலைகுலையச் செய்தல்
   3) வன்முறையை தூண்டுதல் 4) பொழுது போக்களித்தல்
   5) மேற்பார்வை செய்தல்

27. தொலைக்காட்சி விளம்பரமொன்றினைப் பார்த்த வேனுஜன் "குறித்த வியாபாரக் குறியினால் அடையாளப்படுத்தப்படும் குளிர்பானமொன்று இல்லாது உணவருந்த விருப்பம் இல்லை" எனக் கூறினான் இந்த விளம்பரம் குறித்து நிற்கும் பண்பாட்டு அம்சம்
   1) பண்பாட்டு தேக்கம் ஆகும். 2) பண்பாட்டு அதிர்வு ஆகும்.
   3) பண்பாட்டு பரிமாற்றம் ஆகும். 4) பிரசித்த பண்பாடு ஆகும்.
   5) பண்பாட்டு பரவுகை ஆகும்.

28. நாட்டார் ஊடகங்களின் பின்வரும் இயல்புகளைக் கருத்திற் கொள்க.
   A. அது வழக்கமாக பேச்சுமொழி சார்ந்தது
   B. அது நிர்ணயிக்கப்பட்ட அடையாளத்தை கொண்டிராதது
   C. அது ஒரு வடிவத்தினை மாத்திரம் கொண்டது
   D. அந்தந்தப் பகுதிகளுக்குரிய விசேடமானதாகும்
   மேலுள்ள கூற்றுக்களில் சரியானவை
   1) A,B ஆகியன மாத்திரம் 2) A,D ஆகியன மாத்திரம்
   3) A,B,C ஆகியன மாத்திரம் 4) A,B,D ஆகியன மாத்திரம்
   5) A,B,C,D ஆகியன மாத்திரம்

29. நிறுவனத்தின் உள்ளகப் பொதுசனத் தொடர்புக்குப் பொருத்தமான கருவிகளையும் வழிமுறைகளினையும் உள்ளடக்கியிருக்கும் தெரிவினைத் தெரிவு செய்க.
   1) காண்காட்சிகள், புகைப்படங்கள், அனுசரனைகள், நேரடி அழைப்பு இலக்கங்கள்
   2) பிரசுரங்கள், கண்காட்சிகள், செய்தி மடல், அறிவித்தல் பலகை
   3) நலன்புரி அமைப்புக்கள், கூட்டங்கள், சுற்றுலா, அறிவித்தல் பலகை
   4) செய்தி மடல், அறிவித்தல் பலகை, நலன்புரி அமைப்பு, அனுசரனைகள்
   5) புகைப்படங்கள், ஊழியர் நலன்புரி, பிரசுரங்கள், கண்காட்சிகள்



agaram.lk

30. தொலைக்காட்சி ஊடகங்களில் தொடர்நாடகங்களை ஒளிபரப்புச் செய்யும் போது அதிகளவு பயன்படுத்தப்படும் கமரா எடுப்பு வகையை குறிப்பது
 1) அண்மைநிலை எடுப்பு 2) மிகு அண்மைநிலை எடுப்பு 3) இடைநிலை எடுப்பு
 4) நீள் எடுப்பு 5) தூரக்காட்சி எடுப்பு

31. நீங்கள் கூற முனைபவற்றை தெளிவாக மாணவருக்கு சொல்லுங்கள் அப்போது அவர்கள் அதனைப் புரிந்து கொள்வார்கள் பின்வருபவர்களில் எவர் இங்கு வெளிப்படுத்தப்பட்ட சிந்தனையை ஒத்த தொடர்பாடல் வரைவிலக்கணத்தினை உருவாக்கியிருந்தார்.
 1) சார்ள்ஸ் கூலி 2) வில்பர் ஷ்ராம் 3) எட்வேர்ட்சப்பியர்
 4) குளோட்ஷனொன் 5) ஹரோல்ட் லாஸ்வெல்

32. ஊடகங்கள் வழியாக வெளியிடப்படும் தகவல்கள் யாவுமே ஞாபகத்திற்குட்படுவதோ ஏற்றுக்கொள்ளப்படுவதோ அல்லது நிராகரிக்கப்படுவதோ இல்லை என ஆசிரியர் விளக்கினார். இது HUB மாதிரியின் அடிப்படையில்
 1) ஒழுங்காக்கி வழியாக விளங்கப்படுத்த முடியும்.
 2) வாயிற்காப்பு வழியாக விளங்கப்படுத்த முடியும்.
 3) குறிமுறை வழியாக விளங்கப்படுத்த முடியும்.
 4) வடிகட்டி வழியாக விளங்கப்படுத்தபட முடியும்.
 5) ஊடக விஸ்தீரனம் வழியாக விளங்கப்படுத்த முடியும்.

33. முரண்பாடொன்றில் தலையீட்டாளர் அல்லது மத்தியஸ்தரின் வகிபங்கு
 1) முரண்பாடொன்றில் நேரடியாகத் தலையீடுவதாகும்.
 2) இரு தரப்புக்களும் தமது அபிப்பிராயங்களைப் பேசிக்கொள்ள அனுமதித்தல் ஆகும்.
 3) இரு தரப்புக்களுடனும் தனித்தனியாக கலந்துரையாடாதிருத்தல் ஆகும்.
 4) மூன்றாம் தரப்பாக செயற்படாதிருத்தல் ஆகும்.
 5) அழைப்பின் பேரில் மாத்திரம் ஈடுபாட்டினை மேற்கொள்வதாகும்.

34. ஊடகச் செய்தியொன்றின் சாரத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் பெற்றுக் கொள்ள விமர்சன ரீதியிலான பெறுநர் ஒருவரிடம் இருக்க வேண்டிய திறன்
 1) மதிப்பீடு ஆகும் 2) சாரம்சப்படுத்தல் ஆகும் 3) குழுவாக்குதல் ஆகும்
 4) பகுப்பாய்வு ஆகும் 5) உருவாக்கல் ஆகும்

35. பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் அபிராமி தனது முடிவுகளைப் பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்திற்கு சென்று உள்நுழைவு பெற்று அறிந்தாள் அச் சூழலில் அவளுக்கு உதவிய புதிய ஊடகத்தின் பண்புகள்
 1) வலையமைப்பதால், அதிவேகச்செய்தியனுப்புகை, தரவுத்தளம்
 2) மீயுரை, அதிவேகச் செய்தியனுப்புகை, தரவுத்தளம்
 3) வலையமைப்பதால், இடைத் தொடர்பாக்கம், மீயுரை
 4) தானியங்கு, மீயுரை, வலையமைப்பதால்
 5) இடைத் தொடர்பாக்கம், தானியங்கு, அதிவேகச் செய்தியனுப்புகை

36. பின்வருவன பண்பாடு பற்றிய சில கூற்றுக்களாகும்.
 A- மானுட வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை அது இருந்து வருகின்றது
 B- அது மேலெழுந்தவாரியான, எளிமையான மற்றும் பெருந்தொகைத் தயாரிப்புடனான பண்புகளைக் கொண்டிருக்கிறது.
 C- மானுடச் செயற்பாடுகளுடன் வேறுபிரித்தறிய முடியாத இணைப்பை அது கொண்டிருக்கின்றது.
 D- தகவல், கருத்தியல், படைப்பாக்கம், மற்றும் தொடர்பாடல் சமூக வகிபங்கினை அது நிகழ்த்துகின்றது

 மேற்படி வரிசைக்கிரமத்தின் படி பண்பாட்டுவகைப்பாடுகளினை எதிரொலிக்கும் சிறந்த விடையைத் தெரிவு செய்க.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

1) பாரம்பரிய, நாட்டார், பிரசித்த, ஊடகப் பண்பாடுகள்
2) பாரம்பரிய, பிரசித்த, நாட்டார், ஊடகப் பண்பாடுகள்
3) நாட்டார், பாரம்பரிய, ஊடக, பிரசித்த பண்பாடுகள்
4) நாட்டார், ஊடக, பாரம்பரிய, பிரசித்த பண்பாடுகள்
5) ஊடக, பாரம்பரிய, பிரசித்த, நாட்டார் பண்பாடுகள்

37. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. 1: பண்பாட்டு பரிமாற்றம்
   2: திட்டமிட்டும் அதே வேளை திட்டமிடப்படாமலும் நடைபெறமுடியும்.

B. 1: பண்பாட்டு ஆக்கிரமிப்பு
   2: வணிக ரீதியிலான உள்நோக்கத்தினை கொண்டிராதது.

C. 1: பண்பாட்டு அதிர்வு
   2: சொந்தப் பண்பாடுகளை அலட்சியப்படுத்துவதன் ஒரு பெறுதி

மேற்படி கூற்றுக்களில் நேரடித் தொடர்பினைக் காட்டும் சோடி/ சோடிகளைத் தெரிவு செய்க.

1) A மாத்திரம்
2) A,B ஆகியன மாத்திரம்
3) A,C ஆகியன மாத்திரம்
4) B மாத்திரம்
5) B,C ஆகியன மாத்திரம்

➢ பின்வரும் அட்டவணையை வினாக்கள் 38 மற்றும் 39 ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்கு பயன்படத்தவும்.

| X | Y |
|---|---|
| A. விமர்சனம் | படைப்பாக்கக் கலை மீதான இரசனையுணர்வு |
| B. ஊடகவிளங்கறிவு | தனிப்பட்ட வெளி மீதான இலத்திரனியல் ஊடக ஆக்கிரமிப்பு |
| C. ஊடகப்பண்பாடு | பூகோள இருப்பு |
| D. பிரசித்த பண்பாடு | பண்பாட்டு அதிர்வு |

38. மேற்படி அட்டவணையில் x இனால் y இன் நிலை உயரப் பெறுவது

1) A இல்   2) B இல்   3) A மற்றும் B இல்
4) A,B மற்றும் C இல்   5) A,C மற்றும் D இல்

39. மேற்படி அட்டவணையில் x இனால் y இன் நிலை கீழிறங்கப் பெறுவது

1) A இல்   2) B இல்   3) C இல்
4) A,B மற்றும் C இல்   5) B,C மற்றும் D இல்

40. பின்வரும் அட்டவணையை பயன்படுத்தி வினாவுக்கு விடை எழுதுக.

| X | Y |
|---|---|
| 1. சமூக ஊடகம் | A. அதன் விரிவாக்கத்திற்கு குவிகை பங்களிக்கிறது |
| 2. புதிய ஊடகம் | B. உத்தியோக பூர்வ செய்திகளை முன்வைக்க உதவும் |
| 3. லிங்க்டின் | C. தொழில்சார் வலையமைப்பிற்கு இது உதவுகிறது |
| 4. ருவிட்டர் | D. புதிய ஊடகத்தின் விருத்தி பெற்ற நிலை இது |

x இற்கும் y இற்கும் இடையிலான சரியான சோடி சேர்ப்பினை எடுத்துக்காட்டும் விடை எது?

1) 1D,2B,3C,4A   2) 1A,2B,3D,4C   3) 1D,2A,3C,4B
4) 1B,2C,3A,4D   5) 1C,2A,3D,4B

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

41. ஒரு குறித்த பொருளை விற்கும் போது விலைக்கழிவு தொடர்பாக ஊடகம் வழியாக பிரசித்தப்படுத்தபவது
1) வியாபர பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
2) அரச பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
3) நிறுவன பொதுசனத் தொதடர்பு என அழைக்கப்படும்.
4) தொழில்சார் பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
5) ஊடகப் பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.

42. கிரஹம் வோல்ஸ் கூறுவதன் படி படைப் பாக்கச் சிந்தனையின் படிமுறைகளாவன
1) தயாரித்தல், அரும்பல், ஒளியூட்டல், சரிபார்த்தல்
2) தயாரித்தல், அரும்பல், கிளர்வூட்டல், சரிபார்த்தல்
3) தயாரித்தல், அரும்பல், தொடர்புகள், சரிபார்த்தல்
4) தயாரித்தல், அரும்பல், ஒளியூட்டல், கிளர்வூட்டல்
5) அறிவும் ஆர்வம், கிளர்வூட்டல், உருமாறுதல், தொடர்புகள்

43. ஊடக விளங்கறிவுடன் தொடர்புபட்டதாகக் கருத முடியாத திறனொன்று பற்றிய கூற்று
1) ஊடகச் செய்திகளை நுகர்வதற்கான ஏற்புநிலை
2) ஊடகச் செய்திகளை உணரும் தகைமை
3) ஊடகச் செய்திகளின் தாக்கங்களை அறிதல்
4) ஊடகச் செய்திகளின் செயன்முறையை அறிதல்
5) ஊடகச் செய்திகளை உருவாக்கும் தகைமை

44. பொது மக்கள் தொடர்பு பற்றிய சரியான சிந்தனையைக் குறித்து நிற்கும் கூற்றைத் தெரிவு செய்க.
1) அது பிரபல்யமற்றதிலிருந்து வேறுபட்டதல்ல
2) அது விளம்பரத்திலிருந்து வேறுபட்டதல்ல
3) அது சந்தைப்படுத்தலிருந்து வேறுபட்டதல்ல
4) அது தனியாள் சந்தைப்படுத்தலிலிருந்து வேறுபட்டதல்ல
5) அது குறிகிய கால ஆதயங்களை எதிர்பார்ப்பதிலிருந்து வேறுபட்டதல்ல

45. வகுப்பறையொன்றில் ஆசிரியர் ஒருவர் கற்பித்த விடயங்களினை சரியாக உள்வாங்கி கேட்ட மாணவர் ஒருவர் பரீட்சையில் அவ்விடயங்களினை திறம்பட எழுதினான் இச்சந்தர்ப்பம் எந்த தொடர்பாடல் விஞ்ஞானியின் வரைவிலக்கணத்துடன் அதிகம் பொருத்தமுடையதாயிருக்கிறது?
1) ஹரோல்ட்லாஸ்வெல் 2) வோல்ற்றர் லிப்மென் 3) சாள்ஸ் கூலி
4) எட்வேர்ட் சப்பியர் 5) ஷெனொன் மற்றும் வீவர்

46. வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் தான் தயாரித்த நாடகத்தில் சில வினாடிகளுக்கு மௌனத்தைப் பயன்படுத்தினார் இதன் மூலம் தெளிவாவது
1) ஊடக இரைச்சல் பற்றிய புரிதலை வழங்குதல் ஆகும்.
2) வானொலிக்கு மௌனம் பொருத்தமானதல்ல என்பதனைக் காட்டுவதற்கு ஆகும்.
3) நாடகத்திற்கு ஓர் தூண்டலை ஏற்படுத்துவதற்கு ஆகும்.
4) அனுபவக்களத்தினை பயன்படுத்திக் கொள்வதற்கு ஆகும்.
5) நாடகத்தின் சூழலமைவு அம்சங்களினைப் பயன்படுத்தி கொள்வதற்கு ஆகும்.

47. கீழே தரப்படுவன தொடர்பாடலின் சில பண்புகள் ஆகும்.
A. ஆழ்பரிவு B. பல்வகையான பெறுநர்கள் C. சுய எண்ணக்கரு
D. வெளிச்சவீட்டு முறை
மேற்குறிப்பிட்ட பண்புகள் உரித்தான தொடர்பாடலின் வகைகள் முறையே
1) ஆளுள், வெகுசன, ஆட்களிடை, குழுத் தொடர்பாடல்
2) ஆளுள், ஆட்களிடை, குழு, வெகுசனத் தொடர்பாடல்
3) ஆட்களிடை, வெகுசன, ஆளுள், குழுத் தொடர்பாடல்
4) குழு, ஆட்களிடை, ஆளிடை, வெகுசனத் தொடர்பாடல்
5) வெகுசன, குழு, ஆளுள், ஆட்களிடைத் தொடர்பாடல்


agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

48. கீழே தரப்படுவன பொதுமக்கள் தொடர்பு பற்றியதும் அதனோடு இணைந்த செயற்பாடுகள் தொடர்பானதுமான கூற்றுக்கள் சிலவாகும்.

A- 1. ஊடகப் பொதுமக்கள் தொடர்பு
   2. அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்

B- 1. தொழில்சார் பொதுமக்கள் தொடர்பு
   2. ஆய்வு மற்றும் அறிவு

C- 1. நிறுவன பொதுமக்கள் தொடர்பு
   2. அரச உறவுகள்

D-1. அரச பொதுமக்கள் தொடர்பு
   2. ஒழுக்கக் கோவை

மேற்படி கூற்றுக்களில் மிகவும் நெருக்கமான தொடர்பினைக் காட்டும் தெரிவு

1) A,B 2) A,B,C 3) B,C 4) B,C,D 5) A,B,C,D அனைத்தும்

49. ஊடகங்கள் வழியாக வன்முறைகள் நிறைந்த நிகழ்ச்சிகள் முன்வைக்கப்படுவதால் ஏற்படும் சமூகத் தாக்கங்கள் பற்றி வகுப்பறையில் மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அஸ்வினி – அவ்வாறான நிகழ்ச்சிகளைப் பார்ப்பது சிலருக்கு விருப்பம்

சண்முகி – மாணவர்கள் வாழ்க்கையில் தீவிரமாக செல்வாக்கு செலுத்தலாம்

யதுர்ஷி – சில நேரங்களில் வன்முறை குறைவடையலாம்

தீபனா – குடும்பங்கள் மத்தியில் விரும்பத்தகாத பிரச்சனைகளும் உருவாகலாம்.

இந்தச் சிந்தனைகளில் ஏற்றுக்கொள்ளத்தக்க சிந்தனைகளினை முன்வைத்தவர்கள்

1) அஸ்வினி, சண்முகி, யதுர்ஷி ஆகியோர் மாத்திரமாவர்
2) சண்முகி, யதுர்ஷி, தீபனா, ஆகியோர் மாத்திரமாவர்
3) அஸ்வினி, யதுர்ஷி, தீபனா, ஆகியோர் மாத்திரமாவர்
4) அஸ்வினி, சண்முகி, தீபனா ஆகியோர் மாத்திரமாவர்
5) அஸ்வினி, சண்முகி, யதுர்ஷி. தீபனா ஆகிய அனைவருமாவார்

50. பின்வரும் கூற்றுக்களினை அவதானிக்குக.

A – அபிநயங்கள் நான்கு வகைப்படும்.

B - நடிப்பில் யதார்த்த நடிப்பு யதார்த்த விரோத நடிப்பு என வகைப்பாடுகள் உண்டு

C - அளிக்கைத் தொடர்பாடல் வடிவம் நடிப்புடன் தொடர்புடையது

D - ஆடை ஆபரணங்களுடன் வாசீக அபிநயம் தொடர்புபடும்

மேற்குறித்த கூற்றுக்களில் சரியான கருத்தியலை முன்வைத்த தொகுதியை அடையாளப்படுத்துக.

1) A, B மாத்திரம்
2) A, B, C மாத்திரம்
3) B, C, D மாத்திரம்
4) D மாத்திரம்
5) A, B, D மாத்திரம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II<br>Communication & Media Studies II | Three Hours<br>Gr -13 (2022) | 29 | T | II |

மேலதிக நேரம் பத்து நிமிடம்

## பகுதி – II

**அறிவுறுத்தல் :-**
**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
**ஒவ்வொரு வினாவிற்கும் 40 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

***01.* தொடர்பாடல் ஒரு செயன்முறையாகும்.**

i) பாடசாலைக்குள் முறைசார் தொடர்பாடல் நடைபெறும் **இரண்டு** சந்தர்ப்பங்களினை பெயரிடுக. *(4 புள்ளிகள்)*

ii) ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினை** பெயரிட்டு அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

iii) வெகுசன ஊடகங்களுக்கும் சமூக ஊடகங்களுக்குமிடையிலான வேறுபாடுகள் **மூன்றினை** விபரிக்குக. *(12 புள்ளிகள்)*

iv) நீங்கள் விரும்பும் வெகுசன ஊடகம் எதையாவது பயன்படுத்தி HUB மாதிரியின் முக்கிய கூறுகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*

***02.***

i) ஊடக விளங்கறிவு ஏன் தேவையானது என்பதனை **நான்கு** காரணிகளின் அடிப்படையில் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

ii) வானொலியில் முன்வைக்கப்படும் படைப்பாக்க நிகழ்ச்சி வடிவங்கள் **நான்கினை** பெயரிட்டு **இரண்டு** பற்றி விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

iii) ஷ்ராம் - ஒஸ்ட் மாதிரியின் அடிப்படைக் கூறுகள் **மூன்றினை** விளக்குக. *(12 புள்ளிகள்)*

iv) உமது பாடசாலையின் ஊடக தின விழாவினை மெருகூட்டும் வகையில் பயன்படுத்தக்கூடிய நாட்டார் வடிவங்கள் **நான்கினை** பெயரிட்டு அவற்றுள் **இரண்டு** மேற்படி நிகழ்விற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனை உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*

***03.*** பொதுசனத் தொடர்புச் செயற்பாடுகள் பல்வேறு கருவிகள் உபாய வழிமுறைகளுக்கூடாக நடைபெறுகின்றது.

i) ஊடகமாநாடு ஒன்றினை ஒழுங்குபடுத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய **நான்கு** அம்சங்களை பெயரிடுக. *(4 புள்ளிகள்)*

ii) பொதுமக்கள்தொடர்பின் அறிமுகம் பற்றி வரலாற்று ரீதியாக **இரண்டு** அம்சங்களினடிப்படையில் விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

iii) அரசின் வெளிநாட்டு பொதுமக்கள் தொடர்பு பற்றி **மூன்று** வகைப்பாடுகளுக்கூடாக ஆராய்க. *(12 புள்ளிகள்)*

iv) கமரா ஒன்றில் பயன்படுத்தப்படும் எடுப்பு வகைகளினை உதாரணங்களுடன் ஆராய்க. *(16 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

**04.** i) ஊடகத் திறனாய்வாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய **இரண்டு** பண்புகளைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

ii) வாய்மொழி சாராத் தொடர்பாடலின் **இரண்டு** இயல்புகளை சுருக்கமாக விபரிக்குக. *(08 புள்ளிகள்)*

iii) ஊடகக் கண்காட்சிக்காக நிகழ்வு முகாமையாளர் ஒருவர் பயன்படுத்தப்படுவாரெனில் அந்நிகழ்வில் அவரது கடமைகள் **மூன்றினை** விபரிக்குக. *(12 புள்ளிகள்)*

v) செய்திப் பத்திரிகைகளில் படைப்பாக்க மொழியைப் பயன்படுத்துவதைப் பின்வருவனவற்றின் அடிப்படையில் உதாரணங்களுடன் விளக்குக.

அ) தலைப்புச் செய்திகள்

ஆ) சித்தரிப்புக் கட்டுரைகள் *(16 புள்ளிகள்)*

**05.** i) தொலைக்காட்சி ஊடகங்களில் மொழியைப் பயன்படுத்தும் போது அவசியம் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய **நான்கு** அம்சங்களைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

ii) ஏதேனும் நிறுவனத்தில் அல்லது அமைப்பில் உள்ள பொதுமக்கள் தொடர்புச் செயன்முறையுடன் தொடர்புபடும் பங்குதாரர்கள் (பொதுமக்கள்) **நான்கு** வகைகளினை எடுத்துக்காட்டி **இரண்டினை** விபரிக்குக. *(08 புள்ளிகள்)*

iii) பொதுசனத் தொடர்பு செயன்முறை **ஒன்றில்** முரண்பாட்டு முகாமைத்துவத் தீர்வுக்கான வழிமுறைகளினை குறிப்பிட்டு விளக்குக. *(12 புள்ளிகள்)*

iv) சமூக ஊடகங்களின் செயற்பாடுகளில் மானுடநலனுக்கு ஆதாயம் தரக்கூடிய **இரண்டு** காரணிகள் பற்றியும் தீமை பயக்ககூடிய **இரண்டு** காரணிகள் தொடர்பிலும் தனித்தனியே உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*

**06.** i) விமர்சன ரீதியலான பெறுநரொருவர் அவசியம் கொண்டிருக்க வேண்டிய **நான்கு** திறன்களினை பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

ii) செய்திகளை உருவாக்கவும் விநியோகிக்கவும் பயன்படுத்தக்கூடிய சமூக ஊடகப் பிரயோகங்கள் (Apps) **நான்கினைப்** பெயரிட்டு அவற்றுள் **இரண்டினது** செயற்பாடுகள் தொடர்பில் சுருக்கமாக விபரிக்குக. *(08 புள்ளிகள்)*

iii) புதிய ஊடகங்களில் காணப்படக் கூடிய இயல்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. *(12 புள்ளிகள்)*

iv) யுனஸ்கோவினால் வெளியிடப்பட்ட பலகுரல்கள் ஒரு உலகம் அறிக்கையில் குறிப்பிட்டதன் படி வெகுசன ஊடகங்களின் விசேட பணிகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. *(16 புள்ளிகள்)*

**07.** i) மத நிகழ்வொன்றில் பின்பற்றப்படும் வாய்மொழி சாராத தொடர்பாடல் முறைகள் **நான்கினைப்** பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

ii) ஊடகத் திறனாய்வில் பயன்படுத்தப்படக்கூடிய கருத்தியல்கள் **இரண்டினை** விளக்குக. *(08 புள்ளிகள்)*

iii) அனர்த்த நிலைமைகளில் ஊடகங்கள் எவ்விதம் அவசியம் செயற்பட வேண்டும் என்பதைப் பின்வரும் வழிகாட்டல்களினைப் பயன்படுத்தி உதாரணங்களுடன் விளக்குக.

1) தகவல் செயற்பாடு

2) கல்விச் செயற்பாடு

3) சமூக அமைப்புச் செயற்பாடு *(12 புள்ளிகள்)*

iv) பின்வரும் கருத்தியல்கள் பற்றி விளக்கமாக ஆராய்க.

1) ஊடகப்பண்பாட்டில் மார்ஷல்மக்லுவறானின் பங்களிப்பு

2) பிரசித்த பண்பாடு *(16 புள்ளிகள்)*



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!